**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**OS No.137/2019**

2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Cross Examination of CW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலகோபாலன் | தந்தை பெயர் | மாணிக்கம் |
| கிராமம் | கந்தர்வகோட்டை | தாலுகா | கந்தர்வகோட்டை |
| வயது | 44 | தொழில் | மண்டல துணை வட்டாட்சியர் |

நாள் : 16.10.2025

நீ.சா.1

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 2001 –2002 காலகட்டத்தில், புல எண் 36/5 இல் கண்ட சொத்தை பொறுத்து, 1 ஆம் பிரதிவாதி காந்தி என்பவரை கூட்டுப்பட்டாவில் சேர்க்க, கந்தர்வக்கோட்டை வட்டாட்சியரால் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் 2001 ஆம் ஆண்டு நிலஉரிமை பதிவேட்டு திட்டம் நடைபெற்றது உண்மை ஆகும், அந்த திட்டம் சிறப்பு தனி வட்டாட்சியர் மூலமாக நடைபெற்றது. அந்த திட்டம் முடிந்தவுடன் அந்த Unit கலைக்கப்பட்டுவிடும். அதற்கான ஆவணங்கள் கந்தர்வக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லை. அந்த ஆவணங்கள் எங்கு பாதுகாக்கப்படும் என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலக ஆவணக்காப்பகத்தில் பராமரிக்கப்படும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பட்டா மாறுதல் உத்தரவு எங்கள் அலுவலகத்தில் பணிபுரிந்த வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளது என்றால் 2001 காலகட்டத்தில், கந்தர்வக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் நிலஉரிமை பதிவேட்டு திட்ட வட்டாட்சியராக பணிபுரிந்தவரால் தான், அந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. **(மேற்படி பட்டா மாறுதல் உத்தரவின் நகல் சா.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**(மேற்படி ஆவணம் நகல் என்றும் அதில் ந.க.எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் வாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. )

| **சாட்சியின் கையொப்பம்** |
|---|
| |

| |
|---|
| **திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.** |
| **ஒப்பம்.என்.சிவபழனி,<br>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,<br>கந்தர்வகோட்டை.** |